IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. DVC.4/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சந்தியா | Prosecution | PW-1 Cross |
| Father Name | க/பெ.சரபோஜி | Court | JM, Court, Sirkali. |
| Village | நத்தம் | Taluk | Sirkali. |
| District | மயிலாடுதுறை | Age | 39/2025 |

Solemnly affirmed by Tmt.R.Geetha Grade –III Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 19.11.2025.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள அசல் மனுவில் எனது கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் ஆமாம். நான் என்ன பரிகாரம் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது திருமணத்தின் போது நாங்கள் கொடுத்த நகைகள், சீர்வரிசை பொருட்கள், பிள்ளைகளின் வாழ்வாதாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். எனது குழந்தைகளை தரப்பினராக சேர்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு திருமணத்தின் போது எத்தனை பவுன் நகைகள் போட்டார்கள் என்றால் 13.5 பவுன் நகை போட்டதாக மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பவுன் போட்டதற்காக ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

சீர்வரிசை சாமான்களின் பட்டியல் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எந்த ஊரில் வசிப்பதற்கு பாதுகாப்பு கேட்டேன் என்றால் எனது வீட்டில் வசிக்க பாதுகாப்பு கேட்டேன். என் கணவர் வீட்டிலும் எனக்கு பாதுகாப்பு இல்லை என் வீட்டிலும் எனக்கு பாதுகாப்பு இல்லை என்றால் சரிதான். நீதிமன்றம் பாதுகாப்பு கொடுத்தால் என் கணவர் வீட்டில் வசிக்க தயாராக உள்ளேனா என்றால் அது என் கணவர் வீடு இல்லை அவரது சகோதரி சபீதா என்பவரது வீடு ஆகும்.

நான் திருமணம் செய்து என் கணவர் வீட்டிற்கு செல்லும் போதும், நான் கணவர் வீட்டை விட்டு வெளியேறும் போதும் அந்த வீடு என் கணவர் வீடு என்றால் ஆமாம். நான் வீட்டை விட்டு வெளியே வந்தவுடன் எனக்கு தெரியாமல் அவரது சகோதரிக்கு ஆவணங்கள் மூலம் அந்த வீட்டை என் கணவர் எழுதி வைத்துவிட்டார் என்று கூறுகிறேன் என்றால் ஆமாம். என் மனுவில் என் குழந்தைகளுக்கு தலா 10 ஆயிரம் கேட்டுள்ளேனன் என்றால் ஆமாம். ஆனால் எனக்கு எந்த விதமாக ஜீவனாம்சமும் கோரவில்லை. நான் என் கணவருடன் சேர்ந்து வாழ முடியாது என்று சீர்காழீ சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் கணவருடன் சேர்ந்து வாழ முடியாது என்று நான் சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிலையில் தற்போது இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

நான் என் மனுவில் ரூ.20 லட்சம் வேண்டி என் கணவரிடம் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். அந்த தொகையை கொடுக்கும் அளவிற்கு என் கணவருக்கு தகுதி உள்ளதா என்றால் உள்ளது. சீர்காழீ தேசிய நெடுஞ்சாலையில் என் கணவர் எனக்கு 1 ஏக்கர் நஞ்சை நிலம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த நிலம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டதால் அதற்கான இழப்பீட்டினை நான் வாங்கிக்கொண்டேனா என்றால் பாதி தொகை மட்டும்வாங்கிக்கொண்டேன். முதல் தொகையை சரபோஜி வாங்கிக்கொண்டார். என் கணவர் வாங்கும் போது அந்த தகவல் எனக்குதெரியாது. மீதமுள்ள தொகையை நான் வாங்கிக்கொண்டேன். அந்த நிலம் என் நகைகளை வாங்கிக்கொண்டுதான் அவர்கள் என்னிடம் கொடுத்தார்கள். அந்த நிலத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது. அந்த நகைகள் எனது வீட்டில் எனது பெற்றோர் கொடுத்த நகைகள் ஆகும்.

நான் இது போல் என் கணவர் என்னிடம் நகைகளை பெற்றுக்கொண்டு அந்த நிலத்தை எழுதி வைத்தார் என்று என் மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. என் கணவர் பொது அதிகாரம் பெற்று என் மனைவி பேரில் கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்று எதிருரையில் கூறியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

என் கணவர் என்னை அடித்து துன்புறுத்தியதாக என் மனுவில் கூறியுள்ளேன் என்றால் அது சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொண்டேனா என்றால் இல்லை. அப்போது கொடுக்கவில்லை அதன் பிறகு 2020 ல் கொடுத்தேன். 2020 ல் புகார் கொடுத்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**